**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 115** **நாள்:.15.08.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 72வது இந்திய சுதந்திர தின விழாவில் மூவர்ண தேசியக்கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செய்து, மகளிர் சுயஉதவிக் குழு மற்றும் தனிநபர்கள் சுயதொழில் புரிவதற்காக ரூ.2.20 இலட்சம் மதிப்பிலான காசோலையினை சிறப்பு அதிகாரி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்திய சுதந்திர தினவிழா இன்று (15.08.2018) சிறப்பாக நடைபெற்றது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர், தேசிய மாணவர் படை மற்றும் சாரண, சாரணியர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, 4 பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவிகளின் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மகளிர் சுயதொழில் தொடங்கிட சுயஉதவிக் குழுவினருக்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கடனுதவி வழங்கிட திருவொற்றியூர் மண்டலம், வார்டு–3ல் திருநங்கைகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட மாதா மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ரூ.1.20 இலட்சத்திற்கு காசோலை, தனிநபர் சுயதொழில் புரிந்திடும் வகையில் 2 நபர்களுக்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.1 இலட்சத்திற்கான காசோலை என மொத்தம் ரூ.2.20 இலட்சத்துக்கான வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் இணைப்பு காசோலைகளை சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்கள் வழங்கினார்.

2017–18ம் ஆண்டு சென்னை மாவட்டத்திற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் ரூ.410.00 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ரூ.413.00 கோடி வங்கிக்கடன் இணைப்பு ஏற்படுத்தி இலக்கை எட்டியதற்காக திட்ட செயலாக்க அலகு மகளிர் திட்ட அலுவலர்கள் மற்றும் சென்னை ஐ.ஓ.பி. மண்டல அலுவலக தலைமை மேலாளர் அவர்களுக்கும் சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்கள் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற மாணவ/மணவியர்களுக்கும், அணிவகுப்பில் கலந்து கொண்ட தேசிய மாணவர் படை, சாரண, சாரணியர், கலர் பார்ட்டி மற்றும் வாத்தியக்குழுக்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை ஆணையர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (கல்வி) திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப. அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப. அவர்கள், வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள், தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**